**இலங்கை பத்திரிகை மன்றத்தின் - 2010**

**----------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**-------------------------**

**1.1 அபிப்பிராயம்**

**-----------------------**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய இலங்கை பத்திரிகை மன்றம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி இலங்கை பத்திரிகை மன்றத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**-------------------------------------------------------------**

**1.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

**---------------------------------------**

மார்ச் 31 இற்குப் பின்னர் பதிவுசெய்யப்படுகின்ற சகல செய்திப்பத்திரிகைக்கும் தாமதமாகும் மாதமொன்றிற்கு ரூபா 100 வீதம் கட்டணமொன்று அறவிடப்பட வேண்டிய போதிலும், 24 செய்திப்பத்திரிகைகளிலிருந்து தாமதக் கட்டணங்களை அறவீடு செய்து கணக்குகளில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.2.2 பெறவேண்டிய கணக்குகள்**

**-----------------------------------------------**

இலங்கை பத்திரிகை நிறுவகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 70,400 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 6,025,608 ஆன 41 நாட்குறிப்புப் பதிவுகளிற்குரிய நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மொனறாகலை மாவட்ட பாடசாலை மாணவர்களிற்கு நடாத்தப்பட்ட செயலமர்விற்கான உணவிற்காக ரூபா 49,625 செலவிடப்பட்டமைக்கு சிட்டைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், பங்குபற்றியோரின் எண்ணிக்கையினை உறுதிப்படுத்துவதற்கான வருகைப் பதிவேடு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 167,069 கிரயம் கொண்ட நிலையான சொத்துக்களை பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கைக்கு அமைய புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டு புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அதற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சுற்றிக்கைகள் மற்றும் அதிகாரச்சட்டங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1973 இன் 5 ஆம் இலக்க பத்திரிகை மன்ற அதிகாரச்சட்டம் | |
| I 3 ஆம் பிரிவின் (ஆ) i | இலங்கை பத்திரிகை கலைஞர்கள் சங்கத்தினால் பிரேரிக்கப்படுகின்ற ஏழு நபர்களிற்கு மேற்படாத நியாயச் சபையிலிருந்து ஒருவர் பனிப்பாளர் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | II 6 ஆம் பிரிவு | பணிப்பாளர் சபை கூட்டமொன்றிற்கு குறைந்தபட்சம் ஐவர் காணப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டில் 8 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதில் 7 சந்தர்ப்பங்களிலும் அத் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | III 15 ஆம் பிரிவு மற்றும் தண்டப்பணச் சட்டக் கோவையின் 479 ஆம் பிரிவு | ஏதேனுமோர் செய்திப்பத்திரிகையில் பொய்யான அல்லது தண்டப்பண சட்டக்கோவையின் 479 ஆம் பிரிவின் கீழுள்ள விடயமொன்றை அல்லது வெட்கக்கேடான பண்பாடற்ற செய்தியொன்றை பிரசுரிக்கும் சகல நபர்களிற்கும் ரூபா 5,000 அபராதத்தினையோ அல்லது 2 வருட சிறைத் தண்டனையினையோ விதிக்க முடிந்திருந்த போதிலும் அவ்வாறான 6 செய்திப்பத்திரிகைகளிற்கு எதிராக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. . |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவு | 2008 ஆண்டின் பின்னர் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | 8.3.4 ஆம் பந்தி | உத்தியோகத்தர்களின் கையடக்கத் தொலைபேசிக் கட்டணங்களைச் செலுத்தவதற்காக பணிப்பாளர் சபையின் விசேட அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் ரூபா 17,689 செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 திசெம்பர் 12 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஏ/யூ/எம்ஜஎம்/19 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை | வாழ்க்கைச் செலவுப் படி தவிர்ந்த ஏனைய படிகள் தேசிய சம்பள மற்றும் ஊழியர் கோப்பு ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு அதனது பரிந்துரையின் மீது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மாத்திரமே செலுத்தப்பட வேண்டிய போதிலும் கருத்தரங்கு செயலமர்விற்காக ரூபா 225,375 தொகையொன்று படியாக 09 உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. |

(உ) நிதிப்பிரமாணம்

I. நி.பி. 371 — ஆண்டின் இறுதியில் சகல முற்பணங்களும் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 57,000 ஆன முற்பணங்கள் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

### 2.1 நிதி மீளாய்வு

---

#### 2.1.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மன்றத்தின் செயற்பாட்டு நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தினைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 13,445,044 பற்றாக்குறையொன்றானதுடன் மீண்டெழும் செலவினத்திற்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்த ரூபா 12,556,000 மானியத்தின் பின்னர் அது ரூபா 889,045 பற்றாக்குறையொன்றாகியது. முன்னைய ஆண்டிற்கான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தினைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 7,749,658 பற்றாக்குறையொன்றானதுடன் மீண்டெழும் செலவினத்திற்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்த ரூபா 8,302,000 மானியம் காரணமாக அது ரூபா 552,342 மிகையொன்றானமையால் மீளாய்வாண்டின் ரூபா 1,441,387 பின்னடைவிற்காக அலுவலக வாடகை ரூபா 790,000 இனாலும் பிரசாரச் செலவினம் ரூபா 690,880 இனாலும் அதிகரித்திருந்தமை தாக்கமளித்திருந்தன.

#### 2.1.2 பகுப்பாய்வு ரீதியிலான நிதி மீளாய்வு

---

1973 இன் 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை மன்ற அதிகாரச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள இம் மன்றத்தின் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களில் கடந்த பல வருடங்களாக செய்திப்பத்திரிகைகளை பதிவு செய்தல் மாத்திரமே இடம்பெற்று வந்திருந்தது. இருந்த போதிலும், இந் நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்காக ஊழியர் வேதனாதிகளிற்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் ரூபா 5,821,084 செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. ஆயினும் செய்திப்பத்திரிகைகளைப் பதிவு செய்ததினால் கிடைத்த வருமானம் ரூபா 47,750 மாத்திரமேயாகும்.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 2.2.1 செயலாற்றுகை

------------------------------

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன**

(அ) 2010 ஆம் ஆண்டில் பத்திரிகை மன்றத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள பத்திரிகைகளின் எண்ணிக்கை 110 ஆனதுடன் தெரிவுப் பரிசோதனைகளின் படி சந்தையில் விற்பனைக்காக காணப்படுகின்ற மேலும் 30 பத்திரிகைகளைப் பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊடக அமைப்புக்கள் எதுவும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊடக மாநாட்டு வைபவம் ஒன்றை நடாத்துவதற்காக ரூபா 1 மில்லியன் ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொதுசனத் தொடர்பு கற்கைகள் மீதான ஓராண்டுப் பாடநெறி ரூபா 757,734 செலவில் நடாத்தப்பட்டிருந்த போதிலும் தொடக்கத்தில் 25 நபர்கள் பங்குபற்றியிருந்த போதிலும் இதுவரையில் 23 நபர்கள் மாத்திரமே பங்குபற்றியுள்ளனர். மேலும் பாடநெறிக் கட்டணமாக ஒருவரிடமிருந்து ரூபா 30,000 வீதம் ரூபா 750,000 அறவிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 426,000 மாத்திரமே கிடைத்திருந்தது.

(உ) புத்தகப் பிரசுரித்தல் மற்றும் ஆராய்ச்சிகளிற்காக ரூபா 1 மில்லியன் ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 108,740 செலவில் 1000 ஊடக ஆய்வுப் புத்தகங்கள் மாத்திரம் அச்சிடப்பட்டிருந்தன. மேலும் மன்றத்தின் புத்தக விற்பனைப் பிரிவினால் அச்சிடப்பட்டிருந்த 3,644 புத்தகங்கள் திசெம்பர் 31 ஆந் திகதி வரை விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

----------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பத்திரிகைகளை பதிவு செய்யும் கட்டணமாக நாளாந்த செய்திப்பத்திரிகை ஒன்றிற்காக ரூபா 1,000 உம் வாராந்த செய்திப்பத்திரிகை ஒன்றிற்காக ரூபா 500 உம் ஏனைய செய்திப்பத்திரிகை ஒன்றிற்காக ரூபா 250 உம் 1994 பெப்ரவரி 15 ஆந் திகதி தொடக்கம் அறவிடப்பட்டு வருவதுடன் அத்திகதிக்குப் பின்னர் அதாவது 16 வருடங்களில் அது திருத்தியமைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 செப்தம்பர் 07 ஆந் திகதி ரூபா 1,619,051 தொகை 14 சதவீத வட்டி வீதாசாரத்தில் மக்கள் வங்கியில் 3 வருடங்களிற்காக முதலீடு செய்து 2011 மார்ச் மாதத்தில் அது இரத்துச்செய்யப்பட்டிருந்தது. பயனுள்ள தீர்மானத்தினை மேற்கொள்ளாமை காரணமாக நிறுவனத்திற்கு ரூபா 173,168 இழப்பொன்று ஏற்பட்டிருந்தது.

### 2.2.3 ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்த மன்றத்தின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக சாரதி ஒருவர் வெகுசனத் தொடர்பு தகவல் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஊழியரின் சம்பளத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 259,560 மன்றத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

### 2.2.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) பத்திரிகை மன்றத்தின் அலுவலகத்தினை நடாத்திச் செல்வதற்காக 2009 ஒக்தோபர் 07 ஆந் திகதிய 1880 ஆம் இலக்க உடன்படிக்கையின் படி ஆண்டொன்றிற்கு ரூபா 1,380,000 செலுத்தி வாடகைக்குப் பெற்றுக்கொண்ட கட்டிடத்தின் மதிற்சுவரில் பூச்சு வேலைகள், வர்ணம் தீட்டல் மற்றும் கொங்ரீட் வேலைகளைச் செய்வதற்காக 2009 திசெம்பர் 29 ஆந் திகதி ரூபா 86,896 செலவொன்று செய்யப்பட்டிருந்தது. மதிப்பகத் திணைக்களத்தின் சீஎம்/சீஎம்சீ/ஆர்சீ/224 மதிப்பீட்டு அறிக்கையின் படி சகல பழுதுபார்த்தல் வேலைகளும் கட்டிட உரிமையாளரினால் செய்யப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனை, உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டுமாயினும் அதன் படி செயற்படாமை காரணமாக இத் தொகைகையினை அறவிட முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

(ஆ) மேலும், 14 உத்தியோகத்தர்கள் பணிபுரியும் இந் நிறுவனத்தின் அலுவலகம் 27 வருட காலமாக வாடகை செலுத்திய பல்வேறு இடங்களிலும் நடாத்திச் செல்லப்பட்டு வருகிறது. இது தொடர்பில் வெகுசனத் தொடர்புகள் தகவல் அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்து அலுவலகத்திற்குப் பொருத்தமான இடமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

-----------------------------------------------------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 மற்றும் 7.4.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.3 ஆம் பந்திக்கு முரணாக 2010 ஆம் ஆண்டுக்குரிய பாதீடு ஓராண்டு தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பாதீடுசெய்யப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்களவு முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீடு

(ஆ) வருமானங்கள்

(இ) ஓட்டப் பதிவேடுகளை பேணிவருதல்

(ஈ) முறைப்பாடுகளை விசாரணை செய்தல்

(உ) பத்திரிகைகளைப் பதிவு செய்தல்

(C) பாதுகாப்புச் சேவை